DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**IDOP.No. 28/2015**

P.W.1 S.S.ஜோசப் கென்னடி த/பெ. சூசைராஜ் நாள் - 23.08.2022

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என் மனைவிக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னை மனைவியுடன் சேர்த்து வாழ வைக்க கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து கொள்ளவில்லை, பஞ்சாயத்தில் மட்டும் பேசப்பட்டது. ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனக்கு எதிராக எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் என்னையும் என் தாயாரையும் ஷோபா என்ற ஆசிரியை மற்றும் என்னுடைய மச்சான் ஆரோக்கியசாமி ஆகியோர்கள் எதிரிகளாக காண்பிக்கப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் நான் இரண்டாம் திருமணம் செய்து கொண்டு எதிர்மனுதாரரை கொடுமைப்படுத்தியதாக கண்டுள்ளது என்றால் சாட்சி அது தவறான சங்கதி என்று பதில் அளிக்கிறார். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் கண்டுள்ள நபர்கள் நானும் என் தாயாரும் ஷோபா ஆசிரியையும் மற்றும் நிறைய பேரும் இருக்கிறோம் என்றால் சரிதான். இந்த புகைப்படம் எதிர்மனுதாரர் சான்று ஆவணம் 1 ஆக CD உடன் தாக்கல் செய்யப்படவில்லை என்று ஆட்சேபணை எழுப்பப்பட்டு அந்த ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. ஷோபா டீச்சர் என்பவர் எனக்கு உறவினர் அல்ல. என்னுடைய குழந்தைகள் எந்த பள்ளியில் என்ன வகுப்பு படிக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். குழந்தைகளை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று குழந்தைகளை நான் பார்ப்பதற்கு அனுமதி வேண்டும் என்று கோரி தனியாக மனு தாக்கல் செய்யவில்லை ஆனால் இந்த வழக்கு விசாரணைக்கு வரும் போது என் குழந்தைகளை பார்ப்பதற்கு அனுமதி கோரியிருக்கிறேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக குழந்தைகளின் படிப்பு மற்றும் இதர செலவுகளுக்காக நான் நேரடியாக பணம் கொடுத்திருக்கிறேனா என்றால் சாட்சி என்னிடம் கேட்காததால் நான் கொடுக்கவில்லை என்று பதில் அளிக்கிறார். நான் தற்போது கோட்டைக்காடு அஞ்சல், வடகாடு வழி, புதுக்கோட்டை மாவட்டம் என்ற விலாசத்தில் தான் வசித்து வருகிறேன். நான் தற்போது ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, அய்யங்காடு பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன். நான் தினமும் பள்ளிக்கு புதுக்கோட்டை மேட்டுப்பட்டி, ராஜாஜி நகரில் இருந்து போய்வருகிறேன்

என்று சொன்னால் சரியல்ல. கோட்டைக்காடு விலாசத்தில் இருந்து தான் தினமும் பள்ளிக்கு போய்வருகிறேன் என்று பதில் அளிக்கிறார். நான் கோட்டைக்காடு விலாசத்திற்கு போவதில்லை என்றாலும் நான் ராஜாஜி நகர் விலாசத்தில் இருந்து தான் பள்ளிக்கு தினமும் சென்று வருகிறேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆதார் அட்டையில் கோட்டைக்காடு விலாசம் தான் உள்ளது என்று ஆதார் அட்டை எடுத்து எதிர்மனுதாரர் வழக்குரைஞர் கேட்டுக்கொண்டபடி சாட்சி காண்பித்தார். நானும் ஷோபா டீச்சரும் தகாத உறவு கொண்டுள்ளோம் என்றாலும் அதற்கு இடைஞ்சலாக எதிர்மனுதாரரும் குழந்தைகளும் இருப்பதாக அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்களை நானும் ஷோபா டீச்சரும் வேளாங்கண்ணி சென்று எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால் சாட்சி அவ்வாறு சொல்வது சரியல்ல என்று பதில் அளிக்கிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

*Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him/her to be correct.*

*Sessions Judge,
Additional District Court,
Pudukkottai.*